**இலங்கை நீதிவான்களின் நிறுவனம்- 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை நீதிவான்களின் நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து,நிறுவனத்தின்2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம்,நிறுவனத்தின்வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியா-கவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி-யொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவனத்தின்பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள்

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ முகவர் நிலையத்தின் தேவைப்பாடாக உள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| | - | - |
| இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 65 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்தபட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் இலங்கை நீதிவான்களின் நிறுவனத்தினால் பெறுமதி பூச்சியமாகக் காணப்பட்ட ரூபா 46,211,466 ஆன சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழு இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நீதி அமைச்சு 2023 சனவரி 16 ஆம் திகதி சொத்துக்கள் மீள்மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்துள்ளதாகவும், அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கை தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் அமைச்சின் மூலம் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டியபோதிலும் 2022 திசெம்பர் 02 மற்றும் 05 ஆம் திகதி வரை செயலற்ற நிலையில் காசேட்டில் காணப்பட்ட ரூபா 7,142,090,ஆன தொகையொன்று 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் நிச்சயமற்ற கணக்கு மீதியொன்றாக நடைமுறைச் சொத்துகளில் தீர்க்கப்படாது இருந்தது. | 2022 திசெம்பர் 02 ஆம் திகதி இம்மீதி காசேட்டில் பதிவு செய்யப்பட்டு அது நீதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | வருட இறுதியில் காசேட்டில் காணப்பட்ட அம்மீதியை அடுத்த வருடங்களில் செலவிடுவதற்கான அதிகாரமொன்று இல்லாமையால், மேலதிக தொகையை சம்பந்தப்பட்ட ஆண்டின் இறுதியில் திறைசேரிக்கு அனுப்புவதற்காக அமைச்சிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மூலதன மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட | 2020 ஆம் ஆண்டில் மூலதன மானியத்திலிருந்து | மூலதன மானியங்கள் மூலம் கொள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துகளின் தேய்மானத்தை அந்தந்த ஆண்டுகளில் செய்யாமல், அந்த சொத்துக்களின் மதிப்பையும் அதற்கான பெறுமானத் தேய்மான பெறுமதியையும் எவ்வளவு என இனங்காணாது பெறுமானத் தேய்வாக ரூபா 1,374,471 ஆனது மூலதன மானியங்களில் கழிக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறப்பட்ட ரூபா 400,182 ஆன நூலகப் புத்தகங்கள் 10 ஆண்டுகளுக்கு (10%) தேய்மானம் செய்யப்படுவதால், இந்த ரூபா 40,018 ஆனது அந்த நூலகப் புத்தகங்களுடன் தொடர்புடைய 2021 ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வுப் பெறுமதி ஆகும்.<br>2019 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டபடி, 2019 ஆம் ஆண்டில் திறன் மற்றும் பயிற்சித் திட்டங்களுக்காக பெறப்பட்ட ரூபா 1,291,309 தொகை அந்த ஆண்டிற்கான வருமானமொன்றாக அங்கீகரிக்கப்படாமையை சரி செய்வதற்காக அத்தொகை திரட்டப்பட்ட நிதியத்தில் சீராக்கம் செய்யப்பட்டது.<br>மேலும் மேற்குறிப்பிட்ட நூலகப் புத்தகங்களுக்காக 2020 ஆம் ஆண்டில் காலக்கழிவு இனங்காணப்படாமையை சரி செய்வதற்காக ரூபா 30,151 ஆன தொகை திரட்டப்பட்ட நிதியத்தில் சீராக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. | செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் சரியாகக் கண்டறியப்பட்டு மூலதன மானியங்களி லிருந்து கழிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூபா 59,387,302 ஆன நடைமுறையல்லாச் சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்ட திகதிகளுடன், தனிப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தும் அட்டவணை அல்லது நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அந்த சொத்துக்களுக்குக்கான | 2022 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டின்படி தேய்மானம் சரிசெய்யப்பட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | கொடுக்கல் வாங்கல் சரியாகக் கணக்கிடப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

கணக்கிடப்பட்ட மதிப்பு மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 1,297,718 ஆன தேய்மானப் பெறுமதியின் சரியான தன்மையைஉறுதிப்படுத்துவதற்கு முடியவில்லை.

**1.6 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | PE/COP/POLI/Circular மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பிரிவு | சட்டப்பூர்வ நிறுவனங்களின் அமைப்புகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிந்த 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேணடிய போதிலும்,நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 28 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் வேணடிய போதிலும்,என்ற போதிலும், நிறுவனத்தின் 2020 ஆண்டறிக்கை 2023 பெப்ரவரி 10 ஆம் திகதி வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 ஒக்டோபர் 8 அன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், 2020 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு பிழைகளைச் சரி-செய்வதற்காக அதை மீளப் பெற வேண்டியிருந்ததாகவும் 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. 2022 திசெம்பர் 19 அன்று அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரிச் செயலாளரின் 2017 யூன் 28 ஆம் திகதிய 01/2017ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை | சொத்து மற்றும் கிரய முகாமைத்துவத்திற்காக அரசாங்கத்தின் அனைத்து நிதி அல்லாத | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான உரிய அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படவில்லை எனவும், 2023 ஆம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களையும் ஆவணப்படுத்துவது தொடர்பான தகவல்கள் கொம்ப்ட்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆண்டிற்கான உரிய அறிக்கைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கொம்ப்ட்ரோலர் ஹநாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 315(1) | நிதி பிரமாணத்தின்படி, நிறுவனத்தில் பிணை வைக்க வேண்டிய அதிகாரிகளிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப் படவில்லை. | பிணை பெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 392 | 2020 ஒக்டோபர் 03 அன்று வழங்கப்பட்டிருந்த 785870 ஆம் இலக்க ரூபா 25,372 ஆன காசோலை தொலைந்து போனமைக்குப் பதிலாக 2021 மார்ச் 10அன்று மேற்படி மதிப்புக்கு சமமாக 785955 ஆம் இலக்க காசோலை மீண்டும் வழங்கப்பட்டிருந்தும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சேதக் காப்பீட்டுக் கடிதத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப் படவில்லை. | 2020 ஒக்டோபர் 03 ஆம் திகதி 785870 ஆம் இலக்க காசோலை தொலைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, வங்கிக்கு ”கொடுப்பனுவு நிறுத்தல்” உத்தரபொன்று செய்யப்பட்டு காசோலை முறையாக இரத்து செய்யப்பட்டு, 2021 மார்ச் 10 திகதியிட்ட புதிய காசோலையொன்று 785955 ஆம் இலக்கத்தின் கீழ் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம்இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் இணைப்பு 02 இன் படிவத்தின் அடிப்படையில் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை என்பதுடன் சுற்றறிக்கையின் | 2023 ஆம் ஆண்டிற்கான பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 இன் விதிகளின்படி, மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு, வருடாந்த செயல்திறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இணைப்பு 01 இன் படிவத்தின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு முதல் செய்யப்பட வேண்டிய அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடலானது செய்யப்படவில்லை. | | |
| (உ) | திறைசேரிச் செயலாளரின் 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 02/2017ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(i) ஆம் பந்தி | சுற்றறிக்கையின்படி, நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட இரண்டு வாகனங்களின் உரிமைகள் கையகப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.. | NC 3601 வாகனத்தின் பதிவு உரிமையை கையகப்படுத்துவது தொடர்பான ஆவணங்கள் 2022 செப்டம்பர் 22 அன்று நீதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 1,035,725ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 10,614,763 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 9,579,038 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு மாநாட்டு மற்றும் பயிற்சி செலவுகள் ரூபா 186,458 ஆல்,வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டச் செலவு ரூபா 557,568ஆல்,மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணம் ரூபா 174,577ஆல், பெறுமானத் தேய்வு மற்றும் காலக்கழிவு 9,852,807 ஆல் குறைவடைந்தமை மற்றும் சம்பளம் மற்றும் வேதனங்கள் ரூபா 653,867 ஆல், வருடாந்த பங்களிப்புத் தொகை ரூபா 461,500 ஆல், தபாற் கட்டணம் ரூபா 102,160ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)2019 ஆகஸ்ட் 14 முதல் 2019 ஆகஸ்ட் 18 வரையிலான காலப்பகுதியில் நீதிபதிகளுக்கான பயிற்சிக்காக Chandigarh Judicial Academyஇற்குசெலுத்த வேண்டிய நிறுவன செலவினங்கள் (Institutional Expenses) இந்தியன் ரூபா 130,853 ஆன விலைப்பட்டியலுடன் கடிதம் | இக்கொடுப்பனவு தொடர்பான விலைப்பட்டியல் பொருட்களை உரிய அங்கீகாரம் மற்றும் உறுதிப்படுத்தல் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக விலைப்பட்டியல் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரசுக்கு எந்த நஷ்டமும் ஏற்படாத வகையில் உரிய திகதியில் பணம் செலுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். |

2019 நவம்பர் 1 அன்று பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக 2021 சனவரி 21 ஆந் திகதி ரூபா 366,491 செலுத்தப்படடிருந்தது. இவ்வாறு கொடுப்பனவு தாமதமாகியமையால் நாணயமாற்று விகிதத்தின் வேறுபாட்டின் அடிப்படையில் ரூபா 32,606 அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

பயிற்சிக்காக Chandigarh Judicial Academyஇற்குசெலுத்த வேண்டிய நிறுவன செலவினங்கள் (Institutional Expenses) இந்தியன் ரூபா 130,853 ஆன விலைப்பட்டியலுடன் கடிதம் 2019 நவம்பர் 1 அன்று பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக 2021 சனவரி 21 ஆந் திகதி ரூபா 366,491 செலுத்தப்படடிருந்தது. இவ்வாறு கொடுப்பனவு தாமதமாகியமையால் நாணயமாற்று விகிதத்தின் வேறுபாட்டின் அடிப்படையில் ரூபா 32,606 அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

.